# யூன் – 07 – வெள்ளி

## தூய ஜேர்மானுஸ்

## “யோவானின் மகன் சீமோனே, நீ யோவா. 21:15

-----------------------------------------------------------------

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 25 : 13 – 21

அந்நாட்களில் அகிரிப்பா அரசனும், பெர்னிக்கியுவும் பெஸ்தைச் சந்திக்கச் செசரியா வந்தனர். அவர்கள் பல நாள்கள் அங்குத் தங்கியிருந்தபோது பெஸ்து பவுலுக்கு எதிரான வழக்கை அரசனிடம் எடுத்துக் கூறினார் ”பெலிக்சு கைதியாக விட்டுச் சென்ற ஒரு மனிதர் இங்கு இருக்கிறார். நான் எருசலேமிலிருந்தபோது தலைமைக் குருக்களும், யூதரின் மூப்பர்களும் அவரைப்பற்றிய வழக்கை என்னிடம் தெரிவித்து அவருக்கு எதிராகத் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நான் அவர்களைப் பார்த்து, ”குற்றம் சாட்டப்பட்டவர் எவரும் குற்றம் சாட்டியவர்க்கு முன் நின்று தம் மீது சுமத்தப்பட்ட குற்றத்தைப் பற்றி விளக்குவதற்கான வாய்ப்பைப் பெற வேண்டும். அதற்குமுன் அவருக்குத் தீர்ப்பு அளிப்பது உரோமையரின் வழக்கமல்ல” என்று கூறினேன்.எனவே அவர்கள் இங்கே வந்தபோது, சற்றும் காலம் தாழ்த்தாமல் மறுநாளிலேயே நான் நடுவர் இருக்கையில் அமர்ந்து அவரை என்னிடம் கூட்டிக்கொண்டு வருமாறு ஆணை பிறப்பித்தேன்.குற்றம் சுமத்தியவர்கள் எழுந்து பேசியபோது நான் நினைத்திருந்த கொடிய குற்றம் எதுவும் அவர்மீது சுமத்தவில்லை.அவர்கள் அவருக்கு எதிராகச் சொன்னதெல்லாம் தங்கள் சமயத்திலுள்ள சில கருத்து வேறுபாடுகளாகத்தான் இருந்தன. இறந்துபோன இயேசு என்னும் ஒருவரைப் பற்றியும் அவர்கள் பேசினார்கள். இந்த இயேசு உயிரோடு இருப்பதாக பவுல் சாதித்தார்.இக்கருத்துச்சிக்கல்களைப் பற்றிக் கேட்டதும் நான் குழம்பிப்போய், ”நீர் எருசலேமுக்கு வருகிறீரா? அங்கு இவை பற்றி விசாரிக்கப்பட விரும்பகிறீரா?” எனக் கேட்டேன்.பவுல், பேரரசரே விசாரித்துத் தீர்ப்பு அளிக்கும் வரை தம்மைக் காவலில் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆதலால் இவரைச் சீசரிடம் அனுப்பும்வரை காவலில் வைக்குமாறு ஆணை பிறப்பித்தேன்”.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது அரியணையை விண்ணகத்தில் நிலை நிறுத்தியுள்ளார்.

## நற்செய்தி : யோவான்21 : 15 - 19

அக்காலத்தில் தம் சீடர்களுக்குத் தோன்றி இயேசு சீமோன் பேதுருவிடம், ”யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?” என்று கேட்டார். அவர் இயேசுவிடம், ”ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!” என்றார். இயேசு அவரிடம், ”என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்” என்றார்.இரண்டாம் முறையாக இயேசு அவரிடம், ”யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?” என்று கேட்டார். அவர் இயேசுவிடம், ”ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!” என்றார். இயேசு அவரிடம், ”என் ஆடுகளை மேய்” என்றார்.மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், ”யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?” என்று கேட்டார். ”உனக்கு என்னிடம் அன்பு உண்டா?” என்று இயேசு மூன்றாம் முறை கேட்டதால் பேதுரு துயருற்று, அவரிடம், ”ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?”” என்றார். இயேசு அவரிடம், ””என் ஆடுகளைப் பேணிவளர்.”நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடிவந்தாய். உனக்கு முதிர்ந்த வயது ஆகும்போது நீ கைகளை விரித்துக் கொடுப்பாய். வேறொருவர் உன்னைக் கட்டி, உனக்கு விருப்பம் இல்லாத இடத்திற்குக் கூட்டிச்செல்வார் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்”பேதுரு எவ்வாறு இறந்து கடவுளை மாட்சிப்படுத்தப் போகிறார் என்பதைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார். இதைச் சொன்ன பின் பேதுருவிடம், ”என்னைப் பின்தொடர்” என்றார்.

**தியானம் :** இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?”தமது தந்தையின் சித்தத்தை சிரமேற்கொண்டு மனிதகுல மீட்புத்திட்டத்தை செவ்வனே செய்து முடித்த இறைமகன் இயேசு, தாம் தமது தந்தையிடம் திரும்பிச் செல்லவேண்டிய காலம் நெருங்கி வருவதை அறிந்திருந்தவராய், தம் சீடருக்குப் பல தடவைகள் காட்சி தருகின்றார். மரணத்தை வென்றதன் மூலம் இந்த உலகத்தையும், அதுவரை இந்த உலகத்தைத் தன் பிடியில் வைத்திருந்த சாத்தானின் ஆதிக்கத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்த நற்செய்தியை தம் சீடருக்கு உறுதிப்படுத்திய அதேவேளை, தமக்குப்பின் தமது பணியைத் தொடர்ந்து தகுதியான மேய்ப்பனை தெரிவுசெய்ய இறைமகன் இயேசு நடாத்திய நேர்முகப் பரீட்சையையே இன்றைய நற்செய்தியில் வாசிக்கின்றோம். கடும்புயலையும், காற்றையும் அடக்கியபோது “விசுவாசம் குன்றியவனே” என்று வாங்கிக்கட்டிக் கொண்டவர். தாம் படவேண்டிய பாடுகள் மரணம் குறித்து இயேசு அறிவித்த போது “அவை உமக்கு வேண்டாம்” என்று கூறி, “என் கண்முன்னே நில்லாதே சாத்தானே” என்று சாடப்பட்டவர். இவையனைத்துக்கும் மேலாக “அவரை நான் அறியேன்” என்று ஒருமுறை, இருமுறையல்ல, மூன்று முறை மறுதலித்தவர்தான் இந்த சீமோன் என்பவர். தம்மீது கொண்ட உண்மையான அன்பு அனைத்துக் குறைகளையும் போக்கவல்லது என்பதை இறைமகன் இயேசு இன்று நமக்கு உணர்த்த விரும்புகின்றார். பல தடவைகளில் நாம்கூட கடவுளை அன்பு செய்வதாக எண்ணிக் கொண்டு பற்பல வகையான காரியங்களைச் செய்கின்றோம். ஆனால், நாம் செய்கின்ற காரியங்களை மட்டுமல்ல, நம் மனங்களையும் கடவுள் உள்நோக்கிப் பார்க்கிறார் என்பதை பலதடவைகளில் நாம் மறந்து செயற்படுகின்றோம். கடவுளை அன்புசெய்வதாக எண்ணிக் கொண்டு பணம், பகட்டு, பேராசை, புகழ் போன்ற வேற்றுத் தெய்வங்களுக்குப் பலி செலுத்துகின்றோம். தம்மை உண்மையாக, முழுமையாக அன்புசெய்கிறவனால் மட்டுமே தனது ஆடுகளை நன்றாகப் பேணிப் பாதுகாக்க முடியும் என்பதை இறைமகன் அறிந்திருந்தார். எனவேதான், சீமோனிடம் “ என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்” என ஒப்படைக்கு முன்னர் அன்பை உறுதிமொழியாகப் பெற்றுக்கொள்கிறார். நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணி எதுவானாலும், அதை இறை அன்பின் வழியில் மட்டுமே வழிநடாத்திச் செல்வோமாக.